# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0687/2016

ஆணை எண்: 0178/2016

நாள்: 03/12/2016

13.07.2016 நாளிட்ட "தினகரன்'' நாளிதழ் செய்தி — முறைமன்ற நடுவத்தால் முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது

நகராட்சி ஆணையர்
ஆவடி நகராட்சி — எதிர் மனுதாரர்

## ஆணை:

13.07.2016 நாளிட்ட 'தினகரன்' நாளிதழில் வரப்பெற்ற "கழிவு நீரை புழல் ஏரியில் கலப்பதாக" செய்தியின் அடிப்படையில், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 7(1)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறை மன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாக பதிவு செய்து விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்கள் தொடர்பான உண்மை நிலை அறிக்கையினை தல ஆய்வு விவரம் மற்றும் உரிய ஆவணங்களின் நகல்களுடன் ஒரு வார காலத்திற்குள் தாக்கல் செய்திடுமாறு இம்முறை மன்ற நடுவர் அறிவிப்பாணை அ.ம.எண்.0687/16 நாள்: 14.07.2016ன் மூலம் ஆவடி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், கோரப்பட்ட அறிக்கை வரப்பெறாதமைக்கான கண்டனத்தை பதிவு செய்தும் 26.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு வலியுறுத்தியும் அழைப்பாணை (அ.ம.எண்:0687/16/ந நாள்: 17.10.2016) அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.8962/16/இ1 நாள்:25.10.2016 வரப்பெற்றது.

மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

"ஆவடி பெருநகராட்சியின் வாடு எண்.7 மற்றும் 8 ஆகிய பகுதிகளில் சேகரம் ஆகும் மழைநீர் மற்றும் வீடுகளில் இருந்து வெளியேறும் மனித கழிவுகள் அல்லாத பிற கழிவுநீர் குளக்கரை தெரு, எட்டியம்மன் நகர், கமலா நகர் பிரதான சாலை தெருவில் வெங்கடேஸ்வரா நகர் பிரதான சாலை தெருவில் வெங்கடேஸ்வரா நகர் பிரதான சாலை 1800மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வழியாகவும் பின்னர் 200 மீ நீளத்திற்கு தற்காலிக வடிகால் வழியாகவும், நிலப் பரப்பிலுள்ள இயற்கையான வாட்டத்தின் அடிப்படையில் கடைநிலை வடியும் இடமான புழல் ஏரியின் எல்லையில் காலங்காலமாக பல ஆண்டுகளாக வ்டிந்து வருகின்றது. இந்த வடிகாலில் பல இடங்களில் அடைப்புகள் ஏற்பட்டு, புதர்கள் ஏற்பட்டதால் வடிகாலின் வழியாக செல்ல வேண்டிய வடிநீர் சாலையில் வழிந்தோடி, இச்சாலையினை பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் அவதிக்குள்ளாகினர். எனவே, அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி சாலைகளில் இந்த வடிநீர் தேங்கி, சாலையினை பழுது ஏற்படுத்துவதாக இருந்த காரணத்தினாலும், அப்பகுதியில் சுகாதாரத்தினை காப்பதற்காகவும், வடிகாலில் இருந்த அடைப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு, அச்சாலையினை பொது மக்கள் போக்குவரத்திற்கு உகந்ததாக மாற்றப்பட்டு, 11.07.2016 தேதியன்று வடிகாலினை சீரமைத்து, வடிநீர் தடையின்றி செல்லுமாறு பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டது.

இப்பகுதியில் இருந்து மிகவும் குறைந்த அளவே வடிநீர் (நாளொன்றுக்கு சுமார் 10,000 லிட்டர்) ஏரிக்கரைக்கருகில் தற்போது வடிக்கப்படுகின்றது. இப்பகுதிக்கும், ஏரியில் நீர்பரப்பு இருக்கும் பகுதிக்கும் மழைக்காலங்களிலேயே (சென்ற ஆண்டு தவிர) குறைந்தது எட்டு கீலோ மீட்டர் தூரம் உள்ளது. வெய்யில் காலங்களில் இதனைவிட மிகவும் கூடுதலாக தூரத்தில் நீர்பரப்பு இருக்கும். இதனால் எந்தவிதத்திலும், எக்காலத்திலும், குடிநீர் பரப்பில் இவ்வடிநீர் செல்வதோ, குடிநீரில் இவ்வடிநீர் கலப்பதோ கிடையாது. புழல் ஏரி 1876ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 4500 ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்துள்ளது. நீர்பரப்பு பகுதிகளில் இருந்து மழைநீரே இவ்வேரிக்கு நீராதாரமாக விளங்குகின்றது. இவ்வேரி 50.20 அடி ஆழமும் 3300 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டதாகும். தற்போது சுமார் 500 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே உள்ளது.

மேலும், இந்த வடிகால் மூலமாக வடிநீர் புழல் ஏரியின் எல்லையில் வடிவதனால், இதனை தொட்டிகள் அமைத்து சேகரம் செய்து, நகராட்சி கழிவு நீர் ஊர்தி மூலம் அப்புறப்படுத்துவதற்கு மன்ற தீர்மானம் எண் 1284 நாள்: 29.07.2016 வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு, இப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இச்சாலையில் பாதாள சாக்கடை திட்டத்தில் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் வாயிலாக நிறைவேற்றப்படும் திட்டம் ஜனவரி மாதம் 2017ம் ஆண்டு செயல்பாட்டிற்கு வரும் போது, அப்பகுதியில் வீடுகளிலிருந்து வரும் கழிவு நீர் மற்றும் வடிநீர் முற்றிலுமாக பாதாள சாக்கடை திட்டத்தில் இணைக்கப்படும். அப்போது இந்த வடிகால் வழியாக வீடுகளில் இருந்து புழல் ஏரியினை சென்றடையும் நிகழ்வு முற்றிலுமாக நிறுத்தப்படும்."

இம்முறை மன்ற நடுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து, புழல் ஏரியின் எல்லையில் வடியும் வடிநீரை தொட்டிகள் அமைத்து சேகரம் செய்து அப்புறப்படுத்துவதற்கான நகர் மன்ற தீர்மானம் இயற்றப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

26.10.2016 அன்று இம்முறை மன்ற நடுவ விசாரணையின் போது புழல் ஏரியின் எல்லையில் தற்காலிகமாக தொட்டிகள் அமைத்து கழிவு நீர் சேகரிக்கப்பட உள்ள இடத்திற்கும், ஏரிக்குமுள்ள தூரம், ஏரியின் மொத்த நீர்பிடிப்பு பகுதி மற்றும் மேற்படி தொட்டிகளிலிருந்து கசிவு ஏற்படாமலிருப்பதற்கென மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன. விசாரணையின்போது

தொழில்நுட்ப அலுவலரான நகராட்சி பொறியாளரும், நகராட்சி ஆணையாளரும் நகராட்சி ஆணையாளருடன் உடனிருந்து உரிய விளக்கங்களை சமர்ப்பித்தார். மேற்படி விசாரணையின்போது ஆவடி நகராட்சி ஆணையரால் அளிக்கப்பட்ட வாக்குமூலம் வருமாறு:-

"பத்திரிக்கை செய்தியில் குறிப்பிட்டது போன்று குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் புழல் ஏரியில் கலப்பதற்கு எந்தவித சாத்தியமும் இல்லை. தற்போது இது விஷயமாக மன்ற தீர்மானம் 1284, நாள் 27.04.2016 மூலம் புழல் ஏரியினுடைய எல்லையில் கழிவுநீர் கசிவு ஏற்படாதவகையில் தற்காலிக தொட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. புழல் ஏரிக்கும் தற்போது தற்காலிக தொட்டி (கழிவு நீர் சேகரிக்கும்) அமைக்கும் பகுதிக்கும் சுமார் 4 கி.மீ. இருக்கும். இந்த 4 கி.மீ. என்பது புழல் ஏரியின் மொத்த நீர்பிடிப்பும் உள்ள பகுதியை கணக்கில் கொண்டதாகும்.

ஆனால் இது ஒரு தற்கரிலிக ஏற்பாடு தான். நிரந்தரமாக ஆவடியில் மறுசுழற்சி முறையில் இயங்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இந்த பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குறைந்த அளவே இருந்தாலும் அவற்றை ஆவடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பி சுத்திகரிப்பு செய்வதற்கு நிரந்தர ஏற்படாக ஜனவரியில் பணி முடிவுற்று இணைப்பு பணி செய்யப்பட்டுவிடும் தற்போது தற்காலிக ஏற்பாடாக கட்டப்படும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகளில் தேங்கும் கழிவு நீர் எந்த வகையிலும் கசிவு ஏற்படாத வகையில் உரிய முறையில் அனைத்து தொழில்நுட்பங்களையும் கையாண்டு கசிவு ஏற்படாத வகையில் பணி முடிக்கப்படும். அதற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கூறிய ஆலோசனைகளின்படி இத்துறையில் தொழில்நுட்ப தேர்ச்சி பெற்றவர்களின் கருத்து பெற்று பணி முடிக்கப்படும்."

தற்காலிக கழிவு நீர் சேகரிப்பு தொட்டிகள் அடைக்கப்படும்போது 'பொது மக்களின்' முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் புழல் ஏரியின் தன்மை எவ்விதத்திலும் மாசுபடாத வகையில் மிகுந்த அனுபவம் வாய்ந்த மற்றும் தொழிநுட்பவாரியாக தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் கருத்துக்களைப் பெற்று, எவ்வித கசிவும் ஏற்படாத வகையில் அமைக்கப்படுவதுடன் தொடர் தொழில்நுட்ப அலுவலர் கண்காண்ப்பையும், பராமரிப்பினையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு அவ்வாறே ஆணையிடப்பட்டது.

மேலும், இப்பகுதியில் வெளியேறும் கழிவு நீரை மறுசுழற்சி முறையில் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்புவதற்கான இணைப்பு பணிகளை போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்தி நிரந்தர தீர்வினை உரிய காலத்திற்குள் உறுதி செய்து இறுதி அறிக்கையினை அனுப்பி வைக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2016-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3ம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை-600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

5.12.16

பெறுநர்:

நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி , சென்னை – 600 054.

<u>நகல்:</u>

1. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், தக்க நடவடிக்கைக்காக
   செங்கல்பட்டு மண்டலம்,
   தாம்பரம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சேம்பாக்கம்,
   சென்னை - 600 005.

3. நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   சேம்பாக்கம்,
   சென்னை - 600 005.